# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.377/2023 | Date | : 02.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : கந்தசாமி | Calling | : |
| Father Name | : பழனியப்பன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.07.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சங்ககிரி வட்டம், புதிய எடப்பாடி ரோடு, ஆசிரியர் காலனியில் குடியிருந்து லாரி வாங்கி விற்கும் தொழில் செய்துவருகிறேன். கடந்த 26.03.2023 ம் தேதி மாலை 4.30 டு 05.00 மணியளவில் சங்ககிரி டு பவானி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி பச்சக்காடு, கலியனூர் பிரிவு அருகே ரோட்டை கடப்பதற்காக என்னுடைய இரு சக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தேன். பின்னர் ரோட்டை கடந்து பவானி டு சங்ககிரி சாலையில் மத்திய தடுப்புசாலையிலிருந்து 10 டு 15 அடி தூரம் கடந்தபோது பவானியிலிருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்த பல்சர் இரு சக்கர வாகனம் என் மீது மோதியது. மோதியதும் நான் மயக்கம் அடைந்துவிட்டேன். எனக்கு இடது காலில் அடிப்பட்டது. என்னை ஆம்புலன்ஸ்மூலம் சங்ககிரி, அரசுமருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசுமருத்துவமனையில்

சேர்ந்தேன். அங்கு சிகிச்சையிலிருந்தபோது போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரை ஓரளவுதான் பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் எதிரியை அவரால் அடையாளம் காட்ட இயலவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

பவானி டு சங்ககிரி சாலை அதிகபடியான வாகனங்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். நான் சங்ககிரியிலிருந்து சென்று வடக்குபுறமாக பச்சக்காடு செல்வதற்காக ரோட்டை கடந்தேன் என்றால் சரிதான். நான் கடந்த இடத்தில் ரோட்டை கடப்பதற்கான இடைவெளி உள்ளது. எதிரி ஓட்டிவந்த இரு சக்கர வாகனம் சில்வர் கலர் ஆகும். எதிரி மேற்கு புறத்திலிருந்து கிழக்கு புறமாக வந்தார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது இரு சக்கர வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் நான் மயக்கம்ஆகிவிட்டேன் என்றால் சரிதான். சேலம், அரசுமருத்துவமனையில் தான் எனக்கு மயக்கம்தெளிந்தது என்றால் சரிதான் போலிசார் இரண்டுநாட்கள் கழித்துதான் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவுசெய்துகொண்டனர். புகார்வாக்குமூலத்தில் அதில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது, போலிசார் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றபிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த சம்பவத்தின்போது

அடிப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னடைய ஆஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றாலும், நான் தவறாக வாகனத்தை ஓட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு பெறவேண்டி எதிரிக்கு எதிராக பொய் புகார் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Kanthasamy